O.S.No. 361/2023 – Date : 16.03.2026

DW1 – சந்திரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி மாசிலாமணி என் மீது 18.03.2021ல் நான் ரூ.10,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு புரோநோட் எழுதி கொடுத்தாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. இந்த வழக்கில் நான் 18.10.2023ல் ஒரு எதிர் வழக்குரையும் மற்றும் 13.09.2024 தேதியில் கூடுதல் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. என்னிடம் காண்பிக்கப்படும் குடும்ப அட்டையின் நகலில் என்னுடைய கையெழுத்து உள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.5 ஆன தான செட்டில்மெண்ட் பத்திரத்திரத்தை எனது தாயார் வெள்ளையம்மாள் எனக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. மேற்படி தான செட்டில்மெண்ட் சொத்தை இந்த வழக்கில் ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சொல்லி உள்ள கோவிந்தராஜ் எனக்கு என்ன உறவு என்றால் பக்கத்து ஊர்க்காரர். அவரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2023க்கு முன்பாக 2 வருடமாக அவரை தெரியும். மேற்படி பிரமாண பத்திரிக்கையில் 7வது பத்தியில் நான் கோவிந்தராஜ் என்பவரிடம் என்னுடைய கையெழுத்தை போட்டு இடதுகை பெருவிரல் ரேகை வைத்து எதுவும் பூர்த்தி செய்யாமல் நான் கொடுத்த புரோநோட்டினை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி.

வா.சா.ஆ.1 ஆன தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையும் கையெழுத்தும் என்னுடையதுதான் என்றால் சரி. பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டில் நான் கையெழுத்தும் ரேகையும் வைத்து கொடுத்துள்ளேன், அதனால் அதை பெற்றவர் பூர்த்தி செய்து கொள்வதற்கு நான் அதிகாரம் கொடுத்துள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சி மற்றும் அதை எழுதியவருக்கும் எனக்கு எந்தவிரோதமும் இல்லை என்றால் சரி. வாதிக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரி.

வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் மனு தாக்கல் செய்து பார்வையிடவில்லை என்றால் சரி. வாதி என்னுடைய வீட்டிற்கு வந்துள்ளாரா என்றால் அவர் வந்த சமயத்தில் நான் வீட்டில் இல்லை. எனக்கு ஒரு மனைவி, ஒரு மகன் மற்றும் மகள் உள்ளார்கள். தோட்டத்தில் காபி மற்றும் மிளகு பயிர் செய்துள்ளேன். எனக்கு தார்சு வீடு மற்றும் சிமெண்ட் அட்டை போட்ட வீடுகள் உள்ளது என்றால் சரி. வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு அதை திருப்பி கொடுக்காமல் பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

கோவிந்தராஜ் தற்போது ஊரில் உள்ளாரா என்றால் இல்லை. அவரிடம் எந்த தேதியில் கடன் வாங்கினேன் என்று நான் முதலில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கோவிந்தராஜிடம் நான் கடன்வாங்கியதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கடனை எந்த தேதியில் திருப்பி கொடுத்தேன் என்று 2 எதிர் வழக்குரைகளிலும் நான்

சொல்லவில்லை என்றால் சரி. தாவா கடனுறுதி சீட்டை திரும்ப கேட்டு நான் கோவிந்தராஜிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. அவர் மீது நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் பிப்ரவரி மாதம் 2024ல் புகார் கொடுத்தேன், தேதி நினைவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி புகார் கொடுத்தேன் என்றால் சரி. கோவிந்தராஜிடம் நான் கடன் வாங்கிய விவரமும் அவருக்கு நான் அதை திருப்பி செலுத்திய விவரமும் வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரி.

கடனை தருப்பி கொடுக்கவில்லை என்று வாதி எனக்கு நோட்டிஸ் கொடுத்தார் என்றால் சரி. அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி பதில் அறிவிப்பில் கோவிந்தராஜியிடம் கடன் வாங்கிய விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் வாதியின் கடனை ஏமாற்றுவதற்காக நான் தாவா புரோநோட்டை கோவிந்தராஜிடம் கொடுத்தேன் என்றும் அந்த புரோநோட்டை வைத்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் நான் பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு வழக்கறிஞர் மூலம் தாவா கடனை திருப்பி கேட்டு அறிவிப்பு அனுப்பிய பின்னர் அவர் மீது தாவா கடனுறுதி சீட்டை திருப்பி கேட்டு நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் பொய்யான விவரங்களை சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையிலும் பொய்யான விவரங்களை சொல்லி உள்ளேன்

என்றால் சரியல்ல. வாதி கோடியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.